சிறப்பு மாவட்ட நீதிமன்றம்/மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுக் கோருரிமை தீர்ப்பாயம். தஞ்சாவூர்.

முன்னிலை- திரு.மு. வடிவேல், பி.காம்.பி.எல்,

சிறப்பு மாவட்ட நீதிபதி/மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுக் கோருரிமை தீர்ப்பாயத்தார், தஞ்சாவூர்.

2025 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29- ம் நாள் புதன்கிழமை.

மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு கோருரிமை அசல் மனு எண்.672/2024

C.N.R. No.TNTJ070003872024

1. பரிமளா

க/பெ. சஞ்சீவிராஜ்,

2. சஞ்சீவிராஜ்

த/பெ. தங்கராசு,

3. இளவர்.பாவனா, வயது 16,

த/பெ.சஞ்சீவிராஜ்,

3 ம் இளவர் மனுதாரருக்காக அவரது தாயாரும், பாதுகாவலருமான 1 ம் மனுதாரர் பரிமளா

4. பஞ்சம்மாள்

க/பெ. தங்கராசு,

மேற்படி மனுதாரர்களின் வசிப்பிட முகவரி

எண்.4/170, கோட்டுரான் தெரு,

நாலாம்சேத்தி,

சேரன்குளம்,

மன்னார்குடி வட்டம்,

திருவாரூர் மாவட்டம். ...மனுதாரர்கள்

எதிர்

1. கிளை மேலாளர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் லிட்,
கரந்தை, புறநகர் கிளை,
தஞ்சாவூர் மாநகராட்சி.

2. மேலாண் இயக்குநர்
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் லிட்.,
புதிய ரயில் நிலைய சாலை,
கும்பகோணம் நகரம்,
தஞ்சாவூர் மாவட்டம். ...எதிர்மனுதாரர்

இம்மனு முதன் முதலில் தஞ்சாவூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் 04.06.2024 ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு 17.06.2024 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்னர் முதன்மை மாவட்ட நீதிமன்ற உத்தரவுப்படி இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு அனுப்பப்பட்டு மேற்படி வழக்கு கோப்பு இந்நீதிமன்றத்திற்கு 19.06.2024 இல் வரப்பெற்றும் மனுதாரர்கள் சார்பில் வழக்கறிஞர் திரு.R.S.ஜெயசங்கர் அவர்களும், எதிர்மனுதாரர்கள் சார்பில் வழக்கறிஞர் திரு.M. குமரவேல் அவர்களும் முன்னிலையாகியுள்ள இவ்வழக்கு கடந்த 27.01.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது இருதரப்பிலும் செய்யப்பட்ட வாதங்கள் கேட்கப்பட்டு வழக்கில் விசாரணை செய்யப்பட்டுள்ள சாட்சி சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் இந்த

தீர்ப்பாயம் இன்று வழங்கும்.

## உத்தரவு

1. இம்மனுவானது மோட்டார் வாகன சட்டம் பிரிவு 166 ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனு சுருக்கம்:**

இந்த மனுவில் சொல்லப்பட்டுள்ள விபத்தில் இறந்துபோனவர் **17 வயதுடைய பவித்ரா** என்பவர் ஆவார். இறந்துபோனவருக்கு 1ம் மனுதாரர் தாயார், 2 ம் மனுதாரர் தந்தை, 3 ம் மனுதாரர் சகோதரி, 4 ம் மனுதாரர் பாட்டி ஆவார். கடந்த 22.04.2024 ம் தேதியன்று விபத்தில் இறந்துபோன பவித்ரா அவரது உறவினரான ஷாலினி என்பவருடன் திருவாரூர் சென்றுவிட்டு திரும்ப அவரது வீட்டிற்கு வருவதற்காக மதியம் சுமார் 03.00 மணியளவில் ஷாலினியின் நண்பரான பிரகாஷ் என்பவருக்கு சொந்தமான TN 49 DZ 1653 என்ற பதிவெண் கொண்ட ஸ்கூட்டி செஸ்டு இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து கொண்டு திருவாரூரிலிருந்து தஞ்சாவூருக்கு செல்லும் சாலையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி தண்டலை நிவேதா ரைஸ்மில் எதிரில் சாலை விதிகளை அனுசரித்து சாலையின் இடதுபுற ஓரமாக சென்றுக்கொண்டிருந்தபோது, அதே சாலையில் அதே திசையில் இருசக்கர வாகனத்தின் பின்னால் வந்த எதிர்மனுதாரர்களுக்கு சொந்தமான TN 68 N 1164 என்ற பதிவெண் கொண்ட தமிழ்நாடு அரசு பேருந்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும்,

தாறுமாறாகவும், ஓட்டி வந்து இறந்துபோன பவித்ரா உட்கார்ந்து சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தியுள்ளார். மேற்படி விபத்தில் இருசக்கர வாகனத்தின் பின்னால் உட்கார்ந்து சென்ற பவித்ரா நிலைதடுமாறி இருசக்கர வாகனத்திலிருந்து கீழே விழுந்து பலத்த காயங்கள் ஏற்பட்டு உடனடியாக அவர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு அங்கு தீவிர சிகிச்சையில் இருந்த அவர் சிகிச்சை பலனின்றி இரண்டு நாட்கள் கழித்து இறந்துவிட்டார். இந்த விபத்திற்கு எதிர்மனுதாரர்களுக்கு சொந்தமான TN 68 N 1164 என்ற பதிவெண் கொண்ட தமிழ்நாடு அரசு பேருந்தை ஓட்டிய ஓட்டுநரின் கவனக்குறைவே காரணமாகும். இவ்விபத்து தொடர்பாக எதிர்மனுதாரர்களின் பேருந்தை ஓட்டிச்சென்ற ஓட்டுநர் மீது திருவாரூர் தாலுக்கா காவல் நிலையத்தில் குற்ற எண்.138/2024 ல் இ.த.ச. பிரிவுகள் 279, 337 ன்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்து சமயத்தில் இறந்துபோன பவித்ரா ப்ளஸ் டு தேர்வு எழுதியிருந்துள்ளார். மேற்படி பவித்ரா உயிருடன் இருந்திருந்தால் மனுதாரர்களின் எதிர்காலத்திற்கு தேவையான அனைத்தையும் பூர்த்தி செய்திருப்பார். அவர் இறந்துவிட்டதால் மனுதாரர்களுடைய எதிர்காலம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது அவர் இறந்துவிட்ட காரணத்தினால் மிகவும் சிரமத்திற்கு ஆளாகியுள்ள மனுதாரர்களுக்கு விபத்து ஏற்படுத்திய எதிர்மனுதாரர்களான தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் பல்வேறு

தலைப்புகளின் கீழ் ரூ.75,00,000/-ஐ இழப்பீடாக செலுத்த உத்தரவிடவேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

3. 2ம் எதிர்மனுதாரரால் எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டு அதனை 1ம் எதிர்மனுதாரர் ஏற்றுக்கொண்டுள்ளார். அந்த எதிர்உரையின் சுருக்கம்.

மனுதாரர்கள் மனுவில் சொல்லியுள்ள பொருண்மைகள் தவறானது. இறந்துபோன நபரின் வயது, மற்றும் கல்வி தகுதி ஆகியவற்றை ஆவணங்கள் மூலம் நிரூபிக்க வேண்டும். விபத்து சமயத்தில் எதிர்மனுதாரர்களுக்கு சொந்தமான TN 68 N 1164 என்ற பதிவெண் கொண்ட தமிழ்நாடு அரசு பேருந்தை அதன் ஓட்டுநர் 22.04.2024ம் தேதியன்று மாலை சுமார் 03.00 மணியளவில் திருவாரூர் பேருந்து நிலையத்திலிருந்து நடையெடுத்து சாலை விதிகளை அனுசரித்து நிதானமாகவும், கவனமுடனும் தஞ்சாவூர் நோக்கி சென்றுக்கொண்டிருக்கும்போது அதே திசையில் மேற்படி பேருந்திற்கு பின்னால் வந்த TN 49 DZ 1653 என்ற பதிவு எண் கொண்ட ஸ்கூட்டி செஸ்ட் இருசக்கர வாகனத்தினை பிரகாஷ் என்பவர் ஓட்ட அந்த இருசக்கர வாகனத்தின் பின்னால் ஷாலினி மற்றும் பவித்ரா ஆகியோர்கள் உட்கார்ந்து கொண்டு, மேற்படி மூவரும் தலைக்கவசம் அணியாமலும், மேற்படி இருசக்கர வாகனத்தினை ஓட்டிச்சென்ற பிரகாஷ் இருசக்கர வாகனத்தினை அதிவேகமாகவும், அலட்சியமாகவும் ஓட்டிச்சென்று, இருசக்கர வாகனத்திற்கு முன்னால் சென்றுக்கொண்டிருந்த இந்த எதிர்மனுதாரர்களின் பேருந்தை

முந்தி செல்லும்போது நிலைதடுமாறி கீழே விழுந்ததில் இருசக்கர வாகனத்தினை ஓட்டி சென்ற நபரும், பின்னால் உட்கார்ந்திருந்த ஒரு நபரும் காயங்கள் இன்றி தப்பிக்க இருசக்கர வாகனத்தின் பின்னால் மூன்றாவதாக உட்கார்ந்து சென்ற பவித்ரா வலதுபக்கம் விழுந்துள்ள நிலையில் பேருந்தின் இடதுபுற சக்கரம் உரசி அவருக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளது. விபத்திற்கு இந்த எதிர்மனுதாரர்களின் பேருந்து ஓட்டுநர் காரணமில்லை. விபத்திற்கு TN 49 DZ 1653 என்ற பதிவு எண் கொண்ட ஸ்கூட்டி செஸ்ட் இருசக்கர வாகனத்தினை ஓட்டி சென்ற பிரகாஷ் என்பவரும், பின்னால் அலட்சியமாகவும், கவனக்குறைவாகவும் உட்கார்ந்து சென்ற இறந்துபோன நபருமே பொறுப்பாவார்கள். மேலும் விபத்து சமயத்தில் TN 49 DZ 1653 என்ற பதிவு எண் கொண்ட ஸ்கூட்டி செஸ்ட் இருசக்கர வாகனத்தினை ஓட்டி சென்ற பிரகாஷ் என்பவருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை. மேற்படி இருசக்கர வாகனம் எந்தவொரு காப்பீட்டு நிறுவனத்திலும் காப்பீடு செய்யப்படவில்லை. இதனால் இந்த எதிர்மனுதாரர்கள் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர்கள் அல்ல. மனுதாரர்கள் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை மற்றும் வட்டி அதிகம் ஆகிய காரணங்களினாலும் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்:

(1) இந்த விபத்தானது எதிர்மனுதாரர்களுக்கு சொந்தமான TN 68 N 1164 என்ற பதிவெண் கொண்ட தமிழ்நாடு அரசு பேருந்தை ஓட்டி சென்ற ஓட்டுநரின்

கவனக்குறைவு அல்லது அஜாக்கிரதையால் ஏற்பட்டுள்ளதா?

(2) இவ்விபத்தில் இறந்துபோன நபரின் "தன்பால் பங்களிப்பு கவனமின்மை" இருந்துள்ளதா?

(3) எதிர்மனுதாரர்கள் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டுள்ளார்களா?

(4) மனுதாரர்கள் இழப்பீடு பெற உரிமையுள்ளவர்கள் எனில் அவர்கள் பெறத்தக்க இழப்பீடு எவ்வளவு?

5. மனுதாரர்கள் தரப்பில் விபத்தில் இறந்துபோனவரின் தாயாரான 1ம் மனுதாரர் பரிமளா என்பவர் ம.சா.1 ஆகவும், விபத்தை கண்ணுற்ற சாட்சியாக ஷாலினி என்பவர் ம.சா.2 ஆகவும் விசாரணை செய்யப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்களும், குறிப்பாணையின் மூலமாக ம.சா.ஆ.10 முதல் ம.சா.ஆ.17 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் விபத்து சமயத்தில் பேருந்தை ஓட்டிச்சென்ற பேருந்து ஓட்டுநரான காமராஜ் என்பவர் எ.ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

7. <u>பிரச்சனைகள் 1மற்றும் 2 க்கான தீர்வுகள்</u>

மனுதாரர்கள் தரப்பில் இறந்துபோனவரின் தாயாரான 1ம் மனுதாரர் பரிமளா என்பவர் ம.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். இவர் தனது சாட்சியத்தில் இந்த

விபத்து தொடர்பாக எதிர்மனுதாரர்களின் பேருந்தை ஓட்டிச்சென்ற ஓட்டுநர் மீது திருவாரூர் தாலுக்கா காவல் நிலையத்தில் குற்ற எண்.138/2024 ல் இ.த.ச. பிரிவுகள் 279, 337 ன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையின் நகலை ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்துள்ளார். விபத்தை கண்ணுற்ற சாட்சியாக ஷாலினி என்பவர் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். இந்த ம.சா.2 தனது சாட்சியத்தில் கடந்த 22.04.2024 ம் தேதியன்று மதியம் சுமார் 3.00 மணியளவில் TN 49 DZ 1653 என்ற பதிவு எண் கொண்ட ஸ்கூட்டி செஸ்ட் இருசக்கர வாகனத்தினை பிரகாஷ் ஓட்ட அவருக்கு பின்னால் தானும், விபத்தில் இறந்துபோன பவித்ராவும் அமர்ந்து கொண்டு திருவாரூரிலிருந்து தஞ்சாவூருக்கு செல்லும் சாலையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி தண்டலை நிவேதா ரைஸ்மில் எதிரில் சாலை விதிகளை அனுசரித்து சாலையின் இடதுபுற ஓரமாக சென்றுக்கொண்டிருந்ததாகவும், அப்போது அதே சாலையில் அதே திசையில் தங்களுக்கு பின்னால் வந்த TN 68 N 1164 என்ற பதிவெண் கொண்ட தமிழ்நாடு அரசு பேருந்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் தாறுமாறாகவும் ஓட்டி வந்து தாங்கள் சென்றுக்கொண்டிருந்த இருசக்கர வாகனத்தின்மீது மோதி விபத்தினை ஏற்படுத்தியுள்ளார் என கூறியுள்ளார். ம.சா.2 ன் சாட்சியம் மற்றும் ம.சா.ஆ.1 ஆகியவற்றை ஒருங்கிணைந்து பார்க்கும்போது இந்த விபத்தானது எதிர்மனுதாரர்களின் பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது

என முதற்கட்டமாக தெரிய வருகிறது.

8. எதிர்மனுதாரர்கள் சார்பில் விபத்து சமயத்தில் எதிர்மனுதாரர்களுக்கு சொந்தமான TN 68 N 1164 என்ற பதிவெண் கொண்ட தமிழ்நாடு அரசு பேருந்தை ஓட்டிச் சென்ற காமராஜ் என்பவர் எ.ம.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். இந்த எ.ம.சா.1 தனது சாட்சியத்தில்

> " கடந்த 22.04.2024 ம் தேதியன்று மாலை சுமார் 03.00 மணியளவில் தான் TN 68 N 1164 என்ற பதிவெண் கொண்ட தமிழ்நாடு அரசு பேருந்தை திருவாரூர் பேருந்து நிலையத்திலிருந்து நடையெடுத்து சாலை விதிகளை அனுசரித்து நிதானமாகவும், கவனமுடனும் தஞ்சாவூர் நோக்கி சென்றுக்கொண்டிருக்கும்போது அதே சாலையில் தங்களது பேருந்திற்கு முன்னால் TN 49 DZ 1653 என்ற பதிவு எண் கொண்ட ஸ்கூட்டி செஸ்ட் இருசக்கர வாகனத்தினை பிரகாஷ் என்பவர் ஓட்ட மேற்படி இருசக்கர வாகனத்தின் பின்னால் ஷாலினி என்பவரும், பவித்ரா என்பவரும் உட்கார்ந்து கொண்டு மூவரும் தலைக்கவசம் அணியாமல், மேற்படி இருசக்கர வாகனத்தினை ஓட்டிச்சென்ற பிரகாஷ் என்பவர் இருசக்கர வாகனத்தினை அதிவேகமாகவும், அலட்சியமாகவும் சென்றுக்கொண்டிருந்தவரை கவனித்த தான் அவர்களை எச்சரிக்கும்பொருட்டு பேருந்தின் ஒலி எழுப்பியும் அவர்களை தான் பாதி கடந்து சென்றுக்கொண்டிருந்தநிலையில் மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்ற நபர் இருசக்கர வாகனத்தின் வேகத்தை கட்டுப்படுத்த இயலாமல் நிலைதடுமாறி அவர்களாகவே கீழே விழுந்ததில் இருசக்கர வாகனத்தின் பின்னால் உட்கார்ந்து சென்ற நபர் இந்த பேருந்தின் பின் இடதுபுற பாடியில் உரசி கீழே விழுந்து தனக்குத்தானே

| |
|---|
| விபத்தினை ஏற்படுத்திக்கொண்டுள்ளார் எனவும், இந்த விபத்திற்கு இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றவரே முழுபொறுப்பாவார் என்றும், இதனால் இந்த விபத்திற்கு தான் எந்த விதத்திலும் பொறுப்பு இல்லை எனவும் கூறியுள்ளார். |

9. எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிர்உரையில் இந்த இருசக்கர வாகனம் பேருந்திற்கு பின்னால் இருந்து வந்து பேருந்தின் இடதுபக்க வாட்டில் பேருந்தை முந்திச் செல்ல முயற்சிக்கும்போது விபத்து ஏற்பட்டதாக கூறப்பட்டுள்ளது. ஆனால் எ.ம.சா.1 சாட்சியத்தில் இருசக்கர வாகனம் பேருந்திற்கு முன்னால் சென்றுக்கொண்டிருந்தது என கூறியுள்ளார். ஆக விபத்து சமயத்தில் பேருந்திற்கு பின்னால் இருசக்கர வாகனம் வந்துள்ளதாக எதிர்உரையில் கூறப்பட்டுள்ள நிலையில் எ.ம.சா.1 சாட்சியத்தில் பேருந்திற்கு முன்னால் இருசக்கர வாகனம் சென்றுக்கொண்டிருந்ததாக சாட்சியம் அளித்துள்ளதை பார்க்கும்போது விபத்து எவ்வாறு நடைபெற்றது என்பது தொடர்பாக எதிர்மனுதாரர்கள் சரியான பொருண்மையை முன்நிறுத்தவில்லை என இத்தீர்ப்பாயம் கருதுகிறது.

10. இந்நிலையில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் விபத்தில் இறந்துபோன நபர் சென்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்ற பிரகாஷ் என்பவருக்கு விபத்து சமயத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், மேலும் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்ற பிரகாஷ்

என்பவரும், அந்த இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து சென்ற ஷாலினி மற்றும் இறந்துபோன பவித்ரா ஆகியோர்கள் தலைக்கவசம் அணியவில்லை எனவும், இதனால் விபத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்ற நபரது கவனமின்மை பங்களிப்பு இருந்துள்ளதாக எடுத்துக்கொள்ள வேண்டும் என வாதம் செய்துள்ளார்கள்.

11. இந்நிலையில் ம.சா.2 ன் சாட்சியம், எம.சா.1 ன் சாட்சியம் ஆகியவற்றினையும் மனுவில் உள்ள ஏனைய பொருண்மைகள் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றையும் ஒருங்கிணைத்து பார்த்ததில், இந்த விபத்தில் இறந்துபோன நபர் உட்கார்ந்து சென்ற இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. அவர் தலைக்கவசம் அணியவில்லை என்பதும் மேற்படி இருசக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் சென்றுள்ளனர் என்பதும், தெரியவருகிறது. மேற்படி பொருண்மைகளின் அடிப்படையில் பார்க்கும்போது, இறந்துபோன நபர் அமர்ந்து சென்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் விபத்தில் இறந்துபோன நபர் விபத்தின் விளைவை அறிந்தே மேற்படி இருசக்கர வாகனத்தில் பயணம் செய்துள்ளதாக இத்தீர்ப்பாயம் கருதி இந்த விபத்தில் இறந்துபோன நபரின் பங்களிப்பும் இருந்துள்ளதாக இத்தீர்ப்பாயம் கருதுகிறது. இதனால் இந்த விபத்தை பொறுத்தவரையில் இந்த விபத்தானது எதிர்மனுதாரர்களின் பேருந்து ஓட்டுநரின் கவனமின்மையாலும், இந்த விபத்தில் இறந்துபோனவரின் பங்களிப்பு

கவனமின்மையாலும் ஏற்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. இதனை அடுத்து இந்த விபத்தில் எதிர்மனுதாரர்கள் பேருந்தை ஓட்டிய ஓட்டுநரின் கவனமின்மை 80% இருந்துள்ளதாகவும் இந்த விபத்தில் இறந்துபோன பவித்ராவின் தன்பால் கவனமின்மை பங்களிப்பு 20% இருந்துள்ளதாகவும், இத்தீர்ப்பாயம் கருதி இவ்வாறே பிரச்சனைகள் 1 மற்றும் 2 ஆகியவைகளுக்கு தீர்வு காண்கிறது.

12. பிரச்சனை 3 க்கான தீர்வு

மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.4 ஆன பதிவு சான்று நகலின் படி விபத்து ஏற்படுத்திய TN 68 N 1164 என்ற பதிவு எண் கொண்ட பேருந்து எதிர்மனுதாரர்களான தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்திற்கு சொந்தமானது என்பதால் இந்த மனுவில் உள்ள மனுதாரர்கள் பெறத்தக்கதாக நிர்ணயம் செய்யப்படும் இழப்பீட்டுத்தொகையினை எதிர்மனுதாரர்களான தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் செலுத்த வேண்டும் என பிரச்சனை 3 க்கு இத்தீர்ப்பாயம் தீர்வு காண்கிறது.

13. பிரச்சினை 4 க்கான தீர்வு

மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.3 ஆன மரண அறிக்கை நகலில் இறந்துபோனவரின் வயது 17 என குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் விபத்தில் இறந்துபோன பவித்ரா விபத்து சமயத்தில் ப்ளஸ் டு தேர்வு எழுதியிருந்து கல்லூரியில் சேருவதற்காக காத்திருந்ததாக கூறப்பட்டு அவரது பனிரெண்டாம் வகுப்பு படித்துள்ளதற்கான பள்ளி படிப்பு சான்று ம.சா.ஆ.9

ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இறந்துபோன பவித்ரா பள்ளி மாணவியாக இருப்பதால் இவரை பொறுத்து தோராய வருவாய் தான் எடுத்துக்கொள்ள வேண்டும் இந்நிலையில் மனுதாரர்கள் தரப்பில் முன்னிலைப்படுத்தியுள்ள மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், மேலாண்மை இயக்குநர். கர்நாடக அரசு போக்குவரத்து கழகம் எதிர் ஞானமணி 2022(1) TN MAC 590 என்ற வழக்கின் தீர்ப்பில் 9 வது பாராவில் 2018 ம் ஆண்டு நடைபெற்ற சாலைவிபத்தில் இறந்துபோன ஒருவரின் தோராய மாத வருமானம் ரூ.10,000/- முதல் ரூ.15,000/- வரையில் எடுத்து கொள்ளவேண்டும் என்று கூறியுள்ளது. மேற்படி முன்தீர்ப்பின் அடிப்படையில் 2018 ம் ஆண்டுக்கு குறைந்த பட்ச தோராய வருவாய் ரூ.10,000/- என எடுத்துக் கொண்டு அதன்பின்னர் ஒவ்வொரு ஆண்டுக்கும் ரூ.1,000/- சேர்த்துக்கொண்டு, இந்த விபத்து நடந்த ஆண்டு 2024 என்பதால் இறந்துபோனவரின் தோராய மாத வருமானம் ரூ.16,000/- என இத்தீர்ப்பாயம் கணக்கிற்கு எடுத்துக்கொண்டு பின்னர் இறந்துபோன பவித்ரா குத்துச்சண்டை விளையாட்டில் திறன்மிக்கவராக இருந்ததாக கூறியும் அவர் பல விளையாட்டு போட்டிகளில் பங்கு பெற்று தேர்ச்சி பெற்றதற்கான சான்றாவணங்கள் ம.சா.ஆ.8 வரிசையாக குறியீடு செய்யப்பட்டுள்ளதன்படி பார்க்கும்போது இறந்துபோன நபர் ப்ளஸ் டு படித்த மாணவியாக இருந்தபோதிலும் இவர் விபத்தில் இறக்காமல் இருந்திருந்தால் இவர் எதிர்காலத்தில் குத்துச்சண்டை வீராங்கனையாக வந்திருக்க வாய்ப்பு உள்ளது என்பதால் இவரது தோராய மாத வருமானத்துடன்

ரூ.2,000/- சேர்த்துக்கொண்டு இறந்துபோன மாணவியின் தோராய மாத வருமானம் **ரூ.18,000/-** என இத்தீர்ப்பாயம் நிர்ணயம் செய்கிறது.

14. எதிர்கால கூடுதல் வருவாய். விபத்தில் இறந்து போனவரின் **வயது 17** மற்றும் இவர் நிரந்தர வருமானமற்றவர் என்பதை கருத்தில் கொண்டு மாண்புமிகு உச்சநீதிமன்றம் நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் எதிர் பிரனாய்சேத்தி 2017(16) SCC 680 என்ற வழக்கில் கூறியுள்ள வழிகாட்டுதலின்படி எதிர்கால கூடுதல் வருவாய் **40%** என எடுத்துக்கொள்ளப்படுகிறது.

15. சுய செலவினத்திற்கான கழிவு மற்றும் பெருக்கல் எண் கணக்கிடுதல்.

மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.7 ஆன வாரிசுரிமை சான்றிதழின்படி 1 முதல் 3 மனுதாரர்கள் இறந்துபோன பவித்ராவின் வாரிசுதாரர்கள் என்பது தெரியவருகிறது. இந்நிலையில் இந்த 4 ம் மனுதாரர் இறந்துபோன பவித்ராவின் பாட்டி ஆவார். இவரும் இறந்துபோன பவித்ராவை சார்ந்திருந்தவர் என மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. இழப்பீடு கோரும் நபர்கள் இறந்துபோன நபரை சார்ந்து வாழ்ந்த நபராக இருந்தால் போதும், வாரிசுதாரராக இருக்க வேண்டும் என்பதில்லை என்பதால் இவரும் இழப்பீடு பெற உரிமை உள்ளவர் ஆவார். எனவே இறந்துபோனவரை சார்ந்துள்ள நபர்கள் 4 நபர்கள் என்பது தெரிய வருகிறது. அடுத்து இறந்துபோன நபரின் வயது 17 மற்றும் திருமணம் ஆகாதவர் என்பதை கருத்தில் கொண்டு மாண்புமிகு உச்சநீதிமன்றம் சரளவர்மா எதிர் டெல்லி டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் மற்றும்

ஒருவர் 2009 (2) TN MAC 1 (SC) என்ற வழக்கில் கூறியுள்ளபடி இறந்துபோனவரின் சுய செலவினங்களுக்காக 1/2 கழித்து கொள்ளவும் பின்பு ஆண்டு வருமானத்தினை 18 ஆல் பெருக்கிட இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

16. மேற்சொன்ன விபரங்களின் அடிப்படையில் கணக்கிடும் போது வரும் தொகையான ரூ.18,000 + ரூ.7,200 = ரூ.25,200 – ரூ.12,600 = ரூ.12,600 x 12 = ரூ.1,51,200 x 18 = ரூ.27,21,600/- என்பது விபத்தில் இறந்துபோனவரை சார்ந்திருக்கும் மனுதாரர்களுக்கு ஏற்பட்ட எதிர்கால வருவாய் இழப்பு என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

17. ஏனைய தலைப்புகளின் கீழான இழப்பீடு.

மாண்புமிகு உச்சநீதிமன்றம் நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் எதிர் பிரனாய்சேத்தி 2017 (16) SCC 680 என்ற வழக்கிலும் மற்றும் ஜனாபாய் மற்றும் சிலர் எதிர் ஐ.சி.ஐ.சி.ஐ. லம்பர்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் 2022 ACJ 2003 என்ற வழக்கிலும் கூறியுள்ள வழிகாட்டுதல்களை கருத்தில் கொண்டும், இந்த விபத்து நடைபெற்ற ஆண்டு 2024 என்பதை கருத்தில் கொண்டும், இம்மனுவில் 1 முதல் 4 மனுதாரர்கள் Filial Consortium என்ற தலைப்பில் தலா ரூ.48,000/-வீதம், (ரூ.48,000 x 4) = ரூ.1,92,000/-மும், அடுத்ததாக 1 முதல் 4 மனுதாரர்கள் பொதுவாக இறுதி சடங்கு செய்த செலவிற்காக ரூ.18,000/-மும், அறிவு சார்வு சொத்து இழப்பு (Loss of Estate) என்ற தலைப்பில் ரூ.21,600/-மும் பெற உரிமை உள்ளவர் ஆவார்கள். இதன்படி வரும்

மொத்த தொகையான (ரூ.1,92,000 + ரூ.18,000 + ரூ.21,600) = ரூ.2,31,600/- என வரும் தொகையினை மேற்சொன்ன தலைப்புகளின் கீழ் இழப்பீடாக விபத்தில் இறந்துபோன நபரை சார்ந்திருந்த 1 முதல் 4 மனுதாரர்கள் பெற உரிமையுள்ளவர்கள் என இத்தீர்ப்பாயம் கருதுகிறது.

18. மேற்கண்டவாறு கணக்கிடப்பட்டதன் அடிப்படையில் மொத்த எதிர்கால வருவாய் இழப்பு ரூ.27,21,600/- மற்றும் ஏனைய தலைப்புகளின் கீழ் ரூ..2,31,600/-யை சேர்த்து மொத்த எதிர்கால இழப்பீட்டு தொகையான (ரூ 27,21,600 + ரூ.2,31,600) = **ரூ.29,53,200/-** என்பது விபத்தில் இறந்துபோனவரை சார்ந்திருக்கும் மனுதாரர்கள் பெறத்தக்க நியாயமான இழப்பீட்டு தொகை என பிரச்சனை - 4 க்கு இத்தீர்ப்பாயம் தீர்வு காண்கிறது.

முடிவாக, இந்த மனுவானது எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் பெறத்தக்க மொத்த இழப்பீட்டுத்தொகை **ரூ.29,53,200/-** (ரூபாய் இருபத்து ஒன்பது லட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து இருநூறு மட்டும்) என தீர்மானித்து இந்த தொகையில் இறந்துபோன பவித்ராவின் தன்பால் கவனமின்மை பங்களிப்பிற்காக 20% ஆன **ரூ.5,90,640/-** ஐ கழித்து மீதமுள்ள 80% தொகையான **ரூ.23,62,560/-ஐ** இந்த எதிர்மனுதாரர்கள் ஆண்டுக்கு 7.5% வட்டி மற்றும் செலவுத்தொகை சேர்த்து இந்த மனு தாக்கல் செய்த நாள் முதல் தள்ளுபடி செய்யப்பட்ட காலம் எதுவும் இருப்பின் அதைத்தவிர்த்து செலுத்த வேண்டுமெனவும், இந்த தொகையை

எதிர்மனுதாரர்கள் ஒரு மாத காலத்திற்குள் இந்த நீதிமன்றத்தின் வங்கி கணக்கில் செலுத்த வேண்டுமென்றும், அவ்வாறு செலுத்தியதற்காக வங்கிக்கு அனுப்பிய அறிவுரையினை இந்நீதிமன்றத்தில் உடனடியாக தாக்கல் செய்ய வேண்டுமென்றும் மேற்படி இழப்பீட்டுத் தொகையினை பொறுத்தவரையில் 1ம் மனுதாரருக்கு ரூ.8,12,560/-மும், 2ம் மனுதாரருக்கு ரூ.7,50,000/-மும், 3 மற்றும் 4 மனுதாரர்களுக்கு தலா ரூ.4,00,000/-வீதமும், அந்த தொகைகளுக்கு உரிய வட்டி சேர்த்து வரும் தொகையினை பகிர்ந்தளிக்க வேண்டுமென்றும், 1, 2 மற்றும் 4 மனுதாரர்கள் தங்களுக்கு உரிய இழப்பீட்டுத் தொகையினை மனு தாக்கல் செய்து தங்களது வங்கி கணக்கின் மூலம் பெற்றுக்கொள்ள அனுமதி அளித்தும், இம்மனுவின் 3ம் மனுதாரர் இளவர் என்பதால் இளவர் மனுதாரருக்குரிய இழப்பீட்டுத் தொகையினை அவர் உரிய வயதினை அடையும்வரையில் ஏதேனுமொரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் அவர் பெயரில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அவரது வங்கி கணக்கில் வைப்பீட்டிற்குரிய வட்டித்தொகை கிடைக்கும் வகையில் வைப்பீடு செய்ய வேண்டும் எனவும், இந்த உத்தரவு தேதியிலிருந்து 10 நாட்களுக்குள்ளாக மனுதாரர்கள் செலுத்த வேண்டிய பற்றாக்குறை நீதிமன்ற கட்டணமான ரூ.22,967.50-ஐ செலுத்த வேண்டும் எனவும் உத்தரவிடப்படுகிறது. மேலும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், சோழமண்டலம் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிட் எதிர் அய்யனார் மற்றும் ஒருவர் 2020 (4) CTC 272 என்ற வழக்கில் பிறப்பித்துள்ள

உத்தரவின் படி இத்தீர்ப்பாயம் தீர்ப்பாணை எதுவும் வனைய வேண்டியதில்லை என தீர்மானிக்கின்றது. மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் ஊதியம் ரூ.30.625/- என நிர்ணயிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தரிடம் சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்து என்னால் பிழைநீக்கம் செய்த பின் இன்று 2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.01.29 18:24:16 +0530

சிறப்பு மாவட்ட நீதிபதி/மோட்டார் வாகன
விபத்து இழப்பீட்டுக் கோருரிமை
தீர்ப்பாயத்தார். தஞ்சாவூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>

| | |
|---|---|
| ம.சா.1 | பரிமளா (1ம் மனுதாரர்) |
| ம.சா.2 | ஷாலினி (கண்ணுற்ற சாட்சி) |

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | முதல் தகவல் அறிக்கை நகல் |
| ம.சா.ஆ.2 | சட்டப் பிரிவு மாற்று அறிக்கை நகல் |
| ம.சா.ஆ.3 | இறந்துபோன பவித்ராவின் மரண அறிக்கை நகல் |
| ம.சா.ஆ.4 | எதிர்மனுதாரர்களுக்கு சொந்தமான TN 68 N 1164 என்ற பதிவெண் கொண்ட தமிழ்நாடு அரசு பேருந்தின் பதிவு சான்று நகல் |

| | |
|---|---|
| ம.சா.ஆ.5 | எதிர்மனுதாரர்களுக்கு சொந்தமான TN 68 N 1164 என்ற பதிவெண் கொண்ட தமிழ்நாடு அரசு பேருந்தை ஓட்டிச் சென்ற ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல் |
| ம.சா.ஆ.6 | இறந்துபோன பவித்ராவின் இறப்புச் சான்றிதழ் நகல் |
| ம.சா.ஆ.7 | இறந்துபோன பவித்ராவின் வாரிசு சான்றிதழ் நகல் |
| ம.சா.ஆ.8 | இறந்துபோன பவித்ரா குத்து சண்டை போட்டிகளில் வெற்றி பெற்றதற்கான சான்றுகள் எண்ணிக்கை - 8 |
| ம.சா.ஆ.9 | இறந்துபோன பவித்ராவின் பள்ளி படிப்பு சான்று |

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி

| | |
|---|---|
| எ.ம.சா.1 | காமராஜ் (எதிர்மனுதாரர்கள் போக்குவரத்து கழகத்தின் பேருந்தின் ஓட்டுநர்) |

எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம் - இல்லை

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.01.29 18:24:23 +0530

சிறப்பு மாவட்ட நீதிபதி மோட்டார் வாகன
விபத்து இழப்பீட்டுக் கோருரிமை
தீர்ப்பாயத்தார். தஞ்சாவூர்.